# பர்னபா இரக்கம் காட்டினான்

சிறுவர்களுக்கு போதிப்பவர்கள் பாடம் L4b யை வாசிக்கவும்.

இயேசு பிறரில் அன்புகூரவும், எதிரிகளை மன்னிக்கவும், சந்தோஷ உள்ளத்தோடு ஒத்துழைக்கவும் கட்டளை இட்டார்.

ஜெபம்: “பரலோகத் தந்தையே, நீர் எங்களை மன்னித்தது போல நாங்களும் எதிரிகள் உட்பட யாவரையும் மன்னிக்க உதவுவீராக!”

## 1. பிறருக்கு தாழ்மையோடும் இரக்கத்தோடும் சேவைபுரிய தேவ வார்த்தையைக் கொண்டு ஆயத்தமாகுங்கள்.

**அப். 4:34-47 ல் காண்க:** சபையின் தேவையில் உள்ள விசுவாசிகளுக்கு பர்னபா என்ன செய்தான்?

**அப். 49:24-27 ல் காண்க.** மக்கள் சவுலுக்கு (பின்னர் பவுல் என்று அழைக்கப்பட்டார்) பயந்தபோது பர்னபா என்ன செய்தான்?

**அப். 11:20-30 ல் காண்க.**

- வெறுக்கப்பட்ட கிரேக்கர்கள் கிறிஸ்தவர்கள் ஆனபோது பர்னபா என்ன செய்தான்?
- கிரேக்கக் கிறிஸ்தவர்களுக்கு ஒரு சிறந்த போதகர் தேவைப்பட்ட போது பர்னபா என்ன செய்தான்?

**அப். 15:1-4 ல் காண்க:** புறஜாதி கிறிஸ்தவர்கள் யூத பாரம்பரியத்தைக் கைக்கொள்ள வேண்டும் என்று யூத கிறிஸ்தவர்கள் விரும்பியபோது பவுலும் பர்னபாவும் என்ன செய்தனர்?

**யோவான் 13:34-35 ல் காண்க:** தம்முடைய சீஷர்கள் எல்லோரும் என்ன செய்ய வேண்டும் என்று இயேசு கட்டளை இட்டார்?


**மத். 20:1-16 ல் காண்க:** புதிய விசுவாசிகளை விடவும் நாம் இயேசுவுக்காக கடினமாக உழைத்து, துன்பப்பட்டிருந்த போதிலும் அவர்களைக் குறித்த நம் மன நிலை எவ்வாறாக இருக்க வேண்டும்?

**1 கொரி. 13 ஆம் அதிகாரத்தில் காண்க.**

- அன்போடு அனுசரிக்கவில்லை என்றால் நமக்குள்ள வரங்களுக்குள்ள மதிப்பு என்ன?
- அன்பு எனப்படுவதில் அடங்குபவை எவை?
- அன்பில்லாமை என்பதில் அடங்குபவை எவை?
- அன்பு செய்வது எவைகளை?
- அன்பு செய்யாதவை எவை?

**லூக் 23:33, 34 & அப். 7:58-60 ல் காண்க.**

எதிரிகளை குறித்து என்ன செய்ய வேண்டும் என்பதை விளக்கக்கூடியதாக இயேசுவும் ஸ்தேவானும் என்ன ஜெபித்தனர்?



**ரோமர். 14:1-5 ல் காண்க:** கர்த்தராகிய இயேசுவுக்கு எவ்வாறு சேவை செய்ய வேண்டும் என்பதில் வேறு வகையான எண்ணங்கள் உடையவர்களை விசுவாசிகள் எவ்வாறு கருத வேண்டும்?

**2. வரும் வாரத்தில் செய்யவேண்டியவைகளை உங்கள் உடன் ஊழியர்களுடன் திட்டமிடுங்கள்.**

தங்களுக்கு தவிறழைத்தவர்களை இன்னும் மன்னிக்காமல் கசப்புணர்வோடு இருக்கும் விசுவாசிகளின் பெயரைப் பட்டியலிட்டு பின் அவர்கள் இல்லங்களுக்குச் சென்று ஜெபித்து அவர்களைக் காயப்படுத்தியவர்களை மன்னிக்குமாறு செய்யவும்.

இத்தகைய விஷயங்களைக் கூறும் விசுவாசிகளுக்கு மென்மையாக ஆலோசனைகள் வழங்குவது பற்றி முன்கூட்டியே விவாதித்து வைக்கவும்.

- "அவர் மற்றவருக்கு நல்ல வேலை கிடைக்க உதவினாராம். ஆனால் எனக்காக அவர் இதுவரையிலும் இப்படி செய்ததில்லை."
- "சில வருடங்களுக்கு முன்னர் அவர் தன் பிரசங்கத்தில் என்னை வேதனைப்படுத்தினார். அந்த சபைக்கு இனிமேல் ஒருநாளும் போக மாட்டேன்!"
- "அறிவில்லாதவர்கள் கூறும் சாதாரண விஷயங்களைக் கூட அவர் காது கொடுத்து கேட்கிறார். அதனால் அவர் வழிநடத்தும் குழு கூட்டங்களுக்கு நான் இனி போக மாட்டேன்."
- "புதிய பேச்சும் ஒரு மாதிரியான உடைகளுமாய் இருக்கும் அந்தப் புதிய கும்பலோடு இருக்க என்னால் முடியாது!"

புதிய ஏற்பாட்டின் "ஒருவருக்கு ஒருவர் கட்டளைகளை" விவரிக்கும் பவுல் தீமோத்தேயு பாடமான C5e யையோ இந்தப் பாடத்தின் இறுதியில் உள்ள தொகுப்பையோ சேர்ந்து படிக்கவும்.

**3. வரும் ஆராதனை வேளைக்காக உங்கள் உடன் ஊழியர்களுடன் திட்டமிடவும்**

சூழ்நிலைக்குப் பொருத்தமான செயல்பாடுகளைத் தெரிந்து கொள்ளவும்.

பகுதி 1 ல் உள்ள **பர்னபாவின் வாழ்க்கை** நிகழ்ச்சிகளை அல்லது பகுதியை விவரிக்கவும் அல்லது நடித்துக் காட்டவும்.

பகுதி 1 ல் நீங்கள் அறிந்து கொண்டதின் அடிப்படையில் கேள்விகளைக் கேட்கலாம்.

சிறுவர்கள் தாங்கள் தயாரித்த நாடகம், கவிதை கேள்விகளைப் பெரியவர்களுக்கு வழங்கட்டும்.

புதிய ஏற்பாட்டின் ஒருவருக்கொருவர் கட்டளைகளை மீள்பார்வை செய்து, விசுவாசிகள் அதை கைக்கொள்வது குறித்து விவாதிக்கலாம்.

பசியாய் இருந்த மக்களுக்கு இயேசு எவ்வாறு அற்புதமாக உணவளித்தார் என்பதைக் கூறும் யோவான் 6:1-14 ஐ வாசித்து அல்லது கூறி **கர்த்தரின் பந்தியை** அறிமுகப்படுத்தலாம். அவர் இப்போதும் விசுவாசிகளுக்கு ஆவிக்குரிய உணவையும் பானத்தையும் எவ்வாறு அளித்து வருகிறார் என்பதை விவரிக்கவும்.

நேரம் இருந்தால் பின் வரும் கவிதையையோ அல்லது நீங்கள் தேர்ந்தெடுக்கும் ஒன்றையோ யாராவது வாசிக்கட்டும்.

தீமையாளன் தன் வெறுப்பை
துணிந்து இங்கு அறிவித்தான்!
ஆழ்ந்த இருள் சூழ்ந்து வந்து
ஆரவாரத் தடம் பதிக்கும்!
"சோகமாக மனிதன் மாற
சிந்தை விருப்பு கொண்டுளேன்!

இன்னல் ஆழக் கடலில் மூழ்கி
இவன் வருந்த மகிழுவேன்!
முக்கி முனகும் மனிதக் குலத்தின்
வேதனையாம் புலம்பல்கள்
காதுக் கினிய கீத மாகும்
சாத்தான் எனக்கு என்றுமே!"
அக்கினி நரகின் நகைச்சுவையாளன்
அவர் அழும் கண்ணீர் சிரித்து நோக்கி
அவர்களின் மகிழ்ச்சி அழியும் போது
அகமகிழ் வெய்தி கைகொட்டி நகைப்பான்!

எல்லோருமாக 1 யோவான் 13:14 ஐ மனனம் செய்க.

ஒருவர் தோல்வியை ஒருவரிடம் அறிக்கையிட்டு, எதிரிகளுக்காக ஜெபித்து, ஒருவரை ஒருவர் ஊக்குவிக்க சிறுசிறு குழுக்களை அமைக்கவும்.

## ஒருவருக்கொருவர்î கற்பனைகள்:

**அன்பு:**

"ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துதல்" யோவான் 13:34-35, 5:12,17: ரோமர்12:10, 1 தெச. 4:9, 1யோவான் 3:11,14,23, 4:7,11.12,:2: யோவான் 1:5 1பேதுரு 1:22.

நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றும்படி ஒருவரில் ஒருவர் அன்பு கூருதல்: ரோமர் 13:8

ஒருவருக்கொருவர் உள்ள அன்பை அதிகரித்தல்: 2 தெச. 1:3

ஒருவருக்கொருவர் அன்பில் பெருகுதல்: 1தெச 3:12

ஒருவரிடத்தில் ஒருவர் காட்டும் ஆழமான அன்பு திரளான பாவங்களை மூடும்:1பேது. 4:8

**கவனமுடன் நட்புறவு:**

ஒருவருக்கொருவர் ஐக்கியமாய் இருத்தல்: 1 யோவான் 1:7

ஒருவரை ஒருவர் மன்னித்தல்: எபே. 3:13, 4:32, கொலோ. 3:13

பரிசுத்த முத்தத்தால் ஒருவரை ஒருவர் வரவேற்றல்: ரோமர் 16:16, 1கொரி. 16:20, 2கொரி. 13:12, 1பேது 5:14

அப்பம் பிட்குதலில் ஒருவருக்காக ஒருவர் காத்திருத்தல்: 1கொரி 11:33

ஒருவருக்கொருவர் துன்பங்களைத் தாங்குதல் 1 கொரி. 12:26

ஒருவருக்கொருவர் சேவை செய்தல்: கலா 5:13

**சேவை செய்தல்:**

ஒருவருக்கொருவர் கிடைக்கப்பெற்ற வரங்களைக் கொண்டு சேவை செய்தல்: 1பேதுரு 4:10

அன்போடு ஒருவருக்கொருவர் சேவை செய்தல் கலா. 5:13

ஒருவருக்கொருவர் இரக்கம் காட்டுதல்: 1 தெச. 5:15

ஒருவருக்கொருவர் அக்கறை காட்டுதல் : 1 கொரி. 12:25

ஒருவர் பாரங்களை ஒருவர் தாங்குதல்: கலா 6:2

ஒருவர் பாதங்களை ஒருவர் கழுவுதல்: 1 யோவான் 13:14

ஒருவரோடு ஒருவர் இணைந்து பணி செய்தல்: 1 கொரி 3:9; 2 கொரி. 6:1

**<u>போதனை:</u>**

ஒருவருக்கொருவர் போதித்தல்: கொலோ. 3:16

ஒருவருக்கொருவர் அறிவுரை கூறுதல்: ரோமர் 5:14

**<u>ஊக்கம்:</u>**

ஒருவருக்கொருவர் ஊக்கப்படுத்தல் கொலோ: 3:16, எபிரேயர் 10:25

ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுதல்: எபி. 3:13

ஒருவருக்கொருவர் உண்மை பேசுதல்: எபே. 4:25

ஒருவருக்கொருவர் ஜீவனைக் கொடுத்தல்: 1 யோவான் 3:16

ஒருவரை ஒருவர் நேசித்து நல்ல காரியம் செய்தல்: எபி 10:24

**<u>தேற்றுதல்:</u>**

ஒருவருக்கொருவர் தேற்றுங்கள் 1 தெச. 4:18 & 5:1, 11

சங்கீதத்தாலும், போதகத்தாலும், வெளிப்படுத்தலாலும், அந்நியபாஷையாலும், வியாக்கியானத்தாலும் ஒருவரை ஒருவர் பக்தி விருத்தி அடையச் செய்தல் 1 கொரி. 14:26

ஆவிக்குரிய வகையில் அக்கறை காட்டுதல்

பாவத்தை ஒருவருக்கொருவர் அறிக்கை இடுதல்: யாக்கோபு 5:16

ஒருவருக்கொருவர் ஜெபித்தல்: யாக் 5:16 குழுக்களுக்குள்ளும், இடையிலும் ஒற்றுமையை உருவாக்குதல்.

**<u>தாழ்மையோடு செயலாற்றுதல்:</u>**

ஒருவரை ஒருவர் கனம் பண்ணுதல்: ரோமர் 12:10

ஒருவருக்கொருவர் ஒத்துப் போதல்: 2 கொரி. 13:11, ரோமர் 12:16; 15:5

ஒருவருக்கொருவர் குறை சொல்லாமல் இருத்தல்: ரோமர் 14:13

ஒருவரை ஒருவர் மோசமாக பேசாது இருத்தல் யாக்கோபு 4:11; 5:9

ஒருவருக்கொருவர் கீழ்ப்படிதல்: எபே. 5:21

ஒருவருக்கொருவர் தாழ்மையை அணிந்திருத்தல்: 1 பேதுரு 5:5

**<u>ஒற்றுமையோடு வாழ்தல்</u>**

ஒருவருக்கொருவர் பொறுமையோடு இருத்தல்: எபே. 4:2

ஒருவருக்கொருவர் சமாதானமாக வாழ்தல்: ம்த. 9:50

ஒருவரை ஒருவர் அன்போடு உபசரித்தல்: ரோமர் 15:7; 1 பேதுரு. 4:9

ஒன்றாக தேவனை மகிமைப் படுத்துல்: ரோமர் 15:6

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied.
Download from www.Paul-Timothy.net